# ஆழ்வார் திருநகரியில் அருளிச்செயல்

## கிரமத்தின் அற்புதவைகரியும், மற்ற சிறப்புக்களும்

ஸ்ரீ உ. வே. ஆத்தான் அப்பு சடகோபாசாரியார்-மேலைத் திருமாளிகை, ஆழ்வார் திருநகரி.

"உண்டோ வைகாசி விசாகத்திற்
கொப் பொருநாள்
உண்டோ சடகோபர்க் கொப்
பொருவர்—உண்டோ
திருவாய் மொழிக் கொப்பு
தென் குருகைக்குண்டோ
ஒருபார் தன்னி லொக்குமூர் "

என்பது விசதவாக்சிகாமணியான சுவாமி மணவாள மாமுனிகளின் அருள்வாக்காகும். குருகூர் என்றும், குருகை, குருகாபுரி என்றும் வழங்கப்படும் திருத்தலமே ஆழ்வார் திருநகரியாகும். இத்திருநகரியிலே வேதம் தமிழ் செய்த மெய்யன், தென்குருகை நாதனான நம்மாழ்வார் அவதரித்தார். "ஈரொன்பதாம் பாண்டியிலே" இத்திருப்பதி மிகவும் முக்கியமானதாகும். இத்திவ்விய தேசம் ஆழ்வாராலும் ஏற்றம் பெற்றது. அருளிச்செயலாலும் ஏற்றம் பெற்றது. தமிழ்க் கருவூலமாகவே திகழ்கிறது. எண்ணற்ற இலக்கிய இலக்கணங்கள் இவ்வூரில் தோன்றியுள்ளன. அவையாவன - சடகோபர் திவ்விய சரிதம், சடகோபன் சந்திர கலா மாலை, குருகை மான்மியம், குருகை மாலை, மாறன் அலங்காரம், மாறன் அகப்பொருள், மாறன் பவனிக் கோவை, குருகூர் பள்ளு, குருகூர்வரி, நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ், நம்மாழ்வார் தாலாட்டு, என்பன குறிப்பிடத்தக்கனவாம். இராமாயணத்தைத் தமிழில் இயற்றிய கம்பர் சடகோபனைச்சடகோபரந்தாதி என்ற நூலில் பின்வருமாறு பாடியுள்ளார்.

"வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்
தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்
முன்செல்க குணங்கடந்த
போதக் கடல்எங்கள் தென்குரு
கூர்ப்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லுமே தொல்லை
மூலப் பரஞ்சுடரே"

என்பதாகும்.

கோவில்களில் உத்ஸவங் கண்டருளுகின்ற போது எம்பெருமான் நடுவே எழுந்தருள வடமொழி வேதம் எம்பெருமானுக்குப் பின்னால் பாராயணம் செய்யப்பட்டு வருவதும், தமிழ் வேதமாகிய திவ்வியப் பிரபந்தம் அவனது சொரூபத்தை யுணர்ந்து முன் செல்லுதல் தோன்ற முன்னே ஓதப்பட்டு வருவதும் திவ்விய தேசங்கள் தோறும் கண்டுவருகின்றோம்: கம்பர் பெருமான் மற்றோரிடத்தில்,

"அந்த மிலாமறை யாயிரத்
தாழ்ந்த வரும்பொருளைச்
செந்தமி ழாகத் திருத்தில
னேல்நிலத் தேவர்களும்
தந்தம் விழாவும் அழகும்
என்னும் தமிழார்கவியின்
பந்தம் விழா ஒழுகும்
குருகூர் வந்தபண்ணவனே"

என்று குறிப்பிட்டிருக்கின்றார். கோவில்களில் நடைபெறுகின்ற நித்தியநைமித்திக விழாக்களில் எல்லாம் தமிழ் வேதங்களான அருளிச்செயல்களை ஓதவேண்டும். குருகூர்ச் சடகோபன் சொன்ன குறிகொள் ஆயிரத்தையும் அறியக் கற்று வல்ல அருளிச்செயல் சேவிப்பதாலேயே ஸ்ரீ வைஷ்ணவத்வ பூர்த்தி உண்டாகும் என்று தெரிய வருகிறது.

நாதனுக்கு நாலாயிரம் உரைத்த நாதனே

"சேமம் குருகையோ செய்யதிருப்பாற் கடலோ
நாமம் பராங்குசனோ நாரணனோ — தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு"

என்ற பாடலில் நம்மாழ்வாரைப் பகவானாகவே கருதிப் போற்றுகின்றார்கள். இத்தகைய நம்மாழ்வார் அவதரித்த திவ்விய தேசத்தில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற பெருவிழாக்களிலும், திருவிழாக்களிலும், தினசரியும் நடைமுறையில் இருந்துவருகின்ற அருளிச்செயல் கிரமத்தின் அற்புத வைகரியையும், மற்ற சிறப்புக்களையும் சிறிது காண்போம்.

"செய்ய தமிழ்மாலைகள் நாம் தெரிய
வோதி தெளியாத மறைநலன்கள்
தெளிகின்றோமே"

என்றார் ஸ்ரீமந் நிகமாந்த மகா தேசிகன். ஆழ்வார்திருநகரியில் நம்மாழ்வார் திருமுன்பாக எப்பொழுது ஸ்ரீசைலேசதயா பாத்திரம் தொடங்கினாலும் உடனே "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்கிற பிரபந்தம் சேவித்துத்தான் மற்ற பிரபந்தங்கள் சேவிப்பது வழக்கம். கண்ணிநுண் சிறுத்தாம்பு நாதமுனிகளுக்கு அருளிச் செயல் கிடைக்கக் காரணமாக இருந்தபடியால் அதைச் சேவித்து வருவது வழக்கம். சித்திரையில் சித்திரை நாளான மதுரகவி திருநக்ஷத்திரத்தன்று கூட கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற பிரபந்தத்தைச் சேவித்து முடிவில் பயனன்றாகிலும் என்ற சாத்துமறையை அரையர் சுவாமியே சேவித்துவிடுவார். இது போலவே திருவத்யயன உத்ஸவத்தில் ஐந்தாம் திருநாளன்றும் அந்தக் கண்ணிநுண்சிறுத்தாம்பை அரையர் சேவிக்க மதுரகவிகள் நம்மாழ்வாரின் திருவடிகளைத் திருத்துழாயினால் தொழுவார். சித்திரையில் செய்ய திருவாதிரையில் அவதரித்த மாறன் அடிபணிந்து உய்ந்தவரான இராமானுசரின் திருநக்ஷத்திரத்தன்றும், 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற பாசுரங்களின் மூலமே நம்மாழ்வாரின் திருவடிகளைத் தொழுவது வழக்கம். நம்மாழ்வாரும், நம்பி ராமானுசனும் ஒரே ஆசனத்தில் எழுந்தருளித் திருமஞ்சனம் கண்டருளுதல் ஆண்டிற்கு மூன்றுமுறை மட்டுமே நடைபெறுகின்றது. மார்கழித் திருவாதிரை, மாசித் திருநாள் ஏழாம் திருவிழா, வைகாசி ஏழாம் திருவிழாக்களில் இந்த அரிய சேவை. ஐப்பசித் திருமூலத்தன்று மணவாள மாமுனிகள் நம்மாழ்வார் எழுந்தருளும் பல்லக்கில் விசேஷமான விருதுகளுடன் நம்மாழ்வார் சன்னிதிக்கு எழுந்தருளிய பின்பே நம்மாழ்வாருக்குத் திருமண்காப்பு சாத்தப்படும். இது ஓர் தனிச் சிறப்பான வைபவமாகும். இத் திருநகரியிலுள்ள திருக்கோவிலில் அத்யாபக மிராசுதார்கள் எழுவர் உள்ளனர். இவர்களே அருளிப்பாடு ஆன உடன் தனியன் தொடங்குதல், சாத்துமறை தொடங்குதல் முதலியன செய்வார்கள். முதற்பாட்டையும் முடிவுப் பாசுரத்தையும் அரையர் சுவாமிகள் தாளத்துடன் சேவிப்பார். பெரிய நம்பி ஸ்ரீபராங்குச தாஸர், திருவாய்மொழிப் பிள்ளை, கொல்லி காவலதாசர், சடகோபாச்சாரியார் (ஆத்தான் திருமாளிகையார்களுக்குரிய அருளிப்பாடு) மதுரகவி அண்ணவியார்களுக்கு, வகுளாபரணபட்டர், ஆதிநாதபட்டர் என்ற அருளிப்பாடு, சொகுசுதேவராஜ அய்யங்கார் ஆகிய எழுவரே அத்யாபக மிராசுதார்கள். இவர்கள் இன்றும் இந்த சன்னிதியில் அருளிச்செயலைச் சேவித்து வருகின்றார்கள்.

நம்மாழ்வாருக்கு எப்போதெல்லாம் திருமண்காப்பு சாத்தப்படுகிறதோ அப்

போதெல்லாம் திருவாய்மொழிப் வழி ளைக்கு "ஸ்ரீ சடகோபதாஸர்" என்ற அருளிப்பாடுடன் திருமண் காப்பு பிரசாதம் வழங்கப்பட்டு வருகின்றது. அரையர் சுவாமிகளுக்குத் தனியான ஏற்றம் - எந்த விழா நடைபெறுவதாக இருந்தாலும் அரையர் சுவாமி அருளிப்பாடு இல்லாமல் எதுவும் நடைபெறாது. "குருகாவல் நம்பி" என்ற அருளிப்பாடு சொன்னவுடன் அவர் தாளத்துடன் நின்று இசையோடு சேவித்துக் கோஷ்டியாருக்கு அருளிப்பாடு சாதித்தருள ஏற்பாடு செய்வார். மார்கழி மாதத்தில் அரையர் சுவாமிகளின் கைங்கர்யம் மகத்தானது. அந்த இருபது நாட்களிலும் வியாக்கியானம் சேவித்தல், அபிநயம் பிடித்தல் முதலியவற்றைச் சேவிக்கலாம். எந்தத்திவ்விய தேசத்திலும் இல்லாத நம்மாழ்வார் சயனத் திருக்கோலமும், அருகில் சுவாமி ராமானுஜர் தாயார் திருக்கோலத்தில் ஆழ்வாரின் திருவடிகளை வருடிக் கொண்டிருப்பதுமான சேவையாகும். அன்றியும் திருமுடி சேவை, தத்துவப் போர்வை சாத்திப் படிகளைதல், அப்போது அரையர் வியாக்கியானம் முதலியன தனிச்சிறப்பு வாய்ந்தனவாம். இவைகளைக் காணக் கண் பலகோடி வேண்டும். இது போலவே வீடு விடைத் திருமஞ்சனமும், அப்போது அண்ணாவி யார்கள் சேவிக்கும் கவியும் அற்புதமானதாகும்.

இத்திருக்கோவிலில் மாதந்தோறும் முறைப்படி நாலாயிர சேவாகாலம் நக்ஷத்திரக்கிரமமாக இன்றளவும் இடைவிடாமல் நடைபெற்றுவருகின்றது. அந்தந்த ஆழ்வார்களின் திருநக்ஷத்திரத்திற்குத் திருவாய்மொழி ஆயிரமும் உண்டு. ஆனி மாதத்தில் மட்டும் ஐந்து முறைகள் திருவாய்மொழி சேவிக்கப்படுகிறது. காரணம் பெரியாழ்வாருக்காக ஒருமுறை, திருப்புளி ஆழ்வாருக்காக ஒருமுறை. ஞானப்பிரானுக்காக ஒருமுறை, ஜேஷ்டாபிஷேகத்திற்காக ஒருமுறை, மாதக்கிரமப்படி ஒருமுறை. இப்படி அருளிச்செயல் நடைபெற்று வருகின்றது.

### அருளிச்செயல் அனுசந்தானக்கிரமம் பட்டியல்

| திருநக்ஷத்திரம் | ஆழ்வார் ஆச்சார்யர் | அருளிச்செயல்கள் |
|---|---|---|
| ரோகிணி | திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் |
| மிருகசீர்ஷம் | | திருப்பாவை, கண்ணிநுண்சிறுத்தாம்பு |
| திருவாதிரை | எம்பெருமானார் | இராமானுஜ நூற்றந்தாதி |
| புனர்பூசம் | குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி<br>திருவாய்மொழி முதற்பத்து |
| பூசம் | | திருவாய்மொழி இரண்டாம் பத்து |
| ஆயில்யம் | திருமழிசைப்பிரான் | பாடல்களில் நான்முகன் திருவந்தாதி<br>திருவாய்மொழி மூன்றும் பத்து |
| மகம் | திருமழிசையாழ்வார் | திருச்சந்த விருத்தம், திருவாய்மொழி 4ம் பத்து |
| பூரம் | ஆண்டாள் | திருப்பாவை, நாச்சியார் திருமொழி. திருவாய்மொழி 5ம் பத்து. |

| திருநக்ஷத்திரம் | ஆழ்வார் ஆச்சார்யர் | அருளிச்செயல்கள் |
|---|---|---|
| உத்திரம் | பெரியாழ்வாருக்காக | பெரியாழ்வார் திருமொழி முதற் பத்தும்<br>திருவாய்மொழி 6ம் பத்தும் |
| ஹஸ்தம் | பெரியாழ்வார் திருமொழி 2ம் பத்தும் | திருவாய்மொழி 7ம் பத்தும் |
| சித்திரை | மதுரகவி | கண்ணிநுண்சிறுத்தாம்பு<br>பெரியாழ்வார் திருமொழி 3ம் பத்து<br>திருவாய்மொழி 8ம் பத்து |
| சுவாதி | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருவாய்மொழி சாத்துமறை. திருவாய்மொழி 9ம் பத்து |
| விசாகம் | நம்மாழ்வார் | திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி 10ம் பத்து |
| அனுஷம் | நாதமுனி | திருப்பாவை, கண்ணிநுண்சிறுத்தாம்பு |
| கேட்டை | தொண்டரடிப்பொடியாழ்வார் | திருமாலை, திருப்பள்ளியெழுச்சி |
| மூலம் | மணவாளமாமுனிகள் | உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி. |
| பூராடம் | திருமங்கையாழ்வாருக்காக | பெரிய திருமொழி முதற்பத்து |
| உத்திராடம் | | பெரிய திருமொழி 2ம் பத்து |
| திருவோணம் | பொய்கையார் | பெரிய திருமொழி 3ம் பத்தும், முதல் திருவந்தாதியும். |
| அவிட்டம் | பூதத்தார் | பெரிய திருமொழி 4ம் பத்தும் இரண்டாம் திருவந்தாதியும் |
| சதயம் | பேயார் | பெரிய திருமொழி 5ம் பத்து, மூன்றும் திருவந்தாதியும் |
| பூரட்டாதி | | பெரிய திருமொழி 6ம் பத்து |
| உத்திரட்டாதி | | பெரிய திருமொழி 7ம் பத்து |
| ரேவதி | | பெரிய திருமொழி 8ம் பத்து |
| அச்வதி | | பெரிய திருமொழி 9ம் பத்து, திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல். |
| பரணி | | பெரிய திருமொழி 10ம் பத்து, பெரிய திருமடல் |
| கார்த்திகை | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி 11ம் பத்து, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம். |

இவ்வாறாக முறைப்படி நாலாயிர சேவாகாலம் சேவிக்கப்பட்டு வருகின்றது. நம்மாழ்வாரின் அவதார உத்ஸவமான வைகாசித் திருவிழாவின்போது ஐந்தாம் திருநாளன்று நவதிருப்பதி எம்பெருமான்களின் மங்களாசாசனம் தனிச் சிறப்பு வாய்ந்தது. மாசி விசாகத்தன்றும் வைகாசி விசாகத்தன்றும் நம்மாழ்வார் இதே திருமேனியுடன் தாம்பிரபரணியில் தீர்த்தவாரி கண்டருளுகிறார். திருவத்யயன உத்ஸவத்தின் திருவாய்மொழி கேட்டருள நியமனமும், அபூர்வமான சேவையாகும்.

இப்பகுதியில் வாழ்ந்து வந்த கருவூர் சித்தர் என்பவர் வளர்த்து வந்த நாய் ஒன்று ஒருநாள் திருக்குருகூர் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அமுது செய்த எச்சிலை வாரியுண்டு திரும்புகையில் ஆற்று வெள்ளத்தில் மூழ்கி ஆவிபிரிந்து ஆவிசோதிமயமாக ஆகாசத்தில் ஏறிப் பரமபதம் அடைந்தது. அதைக்கண்ட அந்தச் சித்தர் பின் வருமாறு பாடினார்.

"வாய்க்கும் குருகைத் திருவீதி
எச்சிலை வாரியுண்ட
நாய்க்குப் பரமபதம் அளித்தாய்
அந்த நாயோடிந்தப்
பேய்க்கும் பதமளித்தால் பழுதோ
பெருமாள் மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லும்
ஞானத் தமிழ்க்கடலே"

என்று நம்மாழ்வாரைக் குறித்துப் பாடினார். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆழ்வார் திருநகரிக்கு மன்னியசீர் மாறன் கலையே உணவாகக்கொண்ட மகான்களே! வருக ! வருக !! மாறன் அருள்பெறுக என அழைக்கின்றோம்.

---